# சட்டமன்றத் தொகுதி- கள ஆய்வு!

கடலூர் கிழக்கு மாவட்டத்தில் தொகுதி வாரியாக சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வுக் குழுவினர் நேரில் ஆய்வு செய்வதாக கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், மாவட்ட தி.மு.க. செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. கீழ்க்கண்டவாறு அறிவித்துள்ளார்.

தலைமைக் கழகத்தால் அனுப்பப்பட்டுள்ள, கழக தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் டி.இசை, தூத்துக்குடி மேயர் ஜெகன் பெரியசாமி ஆகியோர் அடங்கிய கள ஆய்வுக்குழுவினர், கடலூர் கிழக்கு மாவட்டத்தில் சட்டமன்றத் தொகுதிகளில், தொகுதி வாரியாக கீழ்க்கண்ட பட்டியலில் உள்ளவாறு ஆய்வு மேற்கொள்ள உள்ளனர்.

| தேதி | சட்டமன்றத் தொகுதி | கள ஆய்வு நடைபெறும் இடம் |
|---|---|---|
| 19.05.2026 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி முதல் | குறிஞ்சிப்பாடி தொகுதி | மங்கையர்க்கரசி திருமண மண்டபம், வடலூர் |
| 20.05.2026 புதன் கிழமை காலை 10.00 மணி முதல் | புவனகிரி தொகுதி | ராகவேந்திர திருமண மண்டபம், புவனகிரி |
| 21.05.2026 வியாழக் கிழமை காலை 10.00 மணி முதல் | கடலூர் தொகுதி | மாநகர கழக அலுவலகம், கடலூர் |
| 24.05.2026 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணி முதல் | சிதம்பரம் தொகுதி | அறுபத்து மூவர் திருமண மண்டபம், தெற்கு வீதி, சிதம்பரம் |
| 25.05.2026 திங்கட்கிழமை காலை 10.00 மணி முதல் | காட்டுமன்னார்கோயில் தொகுதி | கிருஷ்ணா திருமண மண்டபம், காட்டுமன்னார்கோயில் |

சட்டமன்றத் தொகுதி வாரியாக நடைபெற உள்ள இக்கள ஆய்வின் போது அந்தந்த தொகுதியில் அடங்கி உள்ள மாநகர, ஒன்றிய, நகர பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் அனைவரும் கழக நிர்வாகிகள் அனைவருக்கும் முறையாக தகவல் தந்து அவர்கள் அனைவரையும் இருவேளைகளிலும் நடைபெறும் இக்கள ஆய்வு நிகழ்ச்சியில் தவறாமல் பங்கேற்கச் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள்: 18.05.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

டாக்டர் ஆர்.கோகுல் மற்றும் வழக்கறிஞர் இன்பா ஏ.என்.ரகு ஆகியோர் கீழ்க்கண்டவாறு கள ஆய்வு மேற்கொள்கின்றனர்.

| நாள் | தொகுதி | மாவட்டம் |
|---|---|---|
| 20.05.2026 | கிருஷ்ணராயபுரம் | கரூர் |
| 21.05.2026 | குளித்தலை | |
| 22.05.2026 | துறையூர் | |
| 24.05.2026 | மண்ணச்சநல்லூர் | திருச்சிவடக்கு |
| 25.05.2026 | முசிறி | |
| 28.05.2026 | நிலக்கோட்டை | |
| 29.5.2026 | திண்டுக்கல் | திண்டுக்கல்கிழக்கு |
| 30.05.2026 | பழனி | |
| 03.06.2026 | விராலிமலை | |
| 31.05.2026 | ஆத்தூர் | புதுக்கோட்டைவடக்கு |
| 01.06.2026 | கந்தர்வக்கோட்டை | |
| 02.06.2026 | புதுக்கோட்டை | |

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை -18
நாள் :18.5.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# அ.சோமு (எ) சோமசுந்தரம்
## மே 20 (2024)



**இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு கழகத்தில் பணியாற்றத் தொடங்கியவர்.**

**புதுச்சேரி மாநிலத்தில் கிளைச் செயலாளர், தொகுதி துணைச் செயலாளர், அணியின் புதுச்சேரி மாநில துணைச் செயலாளர், செயலாளர், தலைமைச் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர் ஆகிய கழகப் பொறுப்புகள் வகித்து பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றதோடு சட்டநகல் எரிப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# தருமபுரி கிழக்கு மாவட்டக் கூட்டம்!
## ஆ.மணி எம்.பி. தலைமையில்!

தருமபுரி, மே 20 –

தருமபுரி கிழக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி. தலைமையில் நடைபெற்றது.இந்த கூட்டத்தில் ஜூன் 3 ஆம் தேதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது, நடைபெற்று முடிந்த சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வு செய்ய வரும் குழு வருகை, மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசனை செய்யப்பட்டது.

கூட்டத்தில் முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் தருமச்செல்வன், அவைத்தலைவர் செல்வராஜ், நகர செயலாளர்கள் நாட்டான்.மாது, எம்பி.கௌதம், முல்லை ரவி, மாநில நிர்வாகிகள் இரா.தாமரைச் செல்வன், செந்தில்குமார், மாவட்ட நிர்வாகிகள் வே.தங்கமணி, ஆறுமுகம். உமாசங்கர், ரேணுகாதேவி, அரூர் கழக வேட்பாளர் சண்முகம், ஒன்றிய செயலாளர்கள் டி.எல். காவேரி, ஏ.எஸ்.சண்முகம்,என். பி.பெரியண்ணன்,

என்.செல்வராஜ், சந்திரமோகன், சௌந்தரராசு, ரத்தினவேல், செங்கண்ணன்,வீரமணி, பச்சியப்பன், மல்லமுத்து, கருணாநிதி, கிருஷ்ணன், வேடம்மாள், வைகுந்தம், முன்னாள் ஒன்றிய செயலாளர்கள் எச்சனஹள்ளி சண்முகம், கே.எஸ்.ஆர்.சேட்டு, பேரூர் கழக செயலாளர்கள் வீரமணி, சூர்யா தனபால்,பிரகாஷ், நகர கழக நிர்வாகிகள் வ.முல்லைவேந்தன், சுருளிராஜன், ராஜா, சார்பு அணியினர் வழக்கறிஞர். அசோக்குமார், கே.ஆர்.சி.செல்வராஜ், கலைச்செல்வன், ஹரிவிக்னேஷ், முரளி, உஷா ராஜேந்திரன், என்.தேவராஜ், முத்துலக்ஷ்மி, ஐ.டி.விங் உதயசூரியன், ஜெ.ராஜேஷ், தமிழ், தமிழழகன் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.

# “உடன்பிறப்பே!.. கழக உயிர்த் துடிப்பே!....”



“தமிழர்களே!.. தமிழர்களே.. என்னைக் கடலில் தூக்கி எறிந்தாலும், நான் கட்டுமரமாகத்தான் மிதப்பேன்; அந்தக் கட்டுமரத்தில் நீங்கள் ஏறிச் சவாரி செய்யலாம்; அது ஒருபோதும் கவிழ்ந்து விடாது. என்னை நீங்கள் கரை சேர்க்கப் பயன்படுத்திக் கொள்ளலாம்! தமிழர்களே!... தமிழர்களே... என்னை நீங்கள் நெருப்பில் தூக்கிப் போட்டாலும், அதிலே நான்விறகாகத் தான் விழுவேன்; அடுப்பெரித்து நீங்கள் சமைத்துச் சாப்பிடலாம்! “தமிழர்களே!..... தமிழர்களே!.. நீங்கள் என்னைப் பாறையில் மோதினாலும், சிதறு தேங்காயாகத் தான் உடைவேன்; நீங்கள் என்னைப் பொறுக்கி எடுத்து தின்று மகிழலாம்!” இப்படிக் கழகத் தலைவராக இருந்த கலைஞர் அவர்கள், 1980 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் கழகம் தோற்றுப்போன நேரத்தில், மேற்கண்டவாறு சென்னை மெரினா கடற்கரைக் கூட்டத்திலும், திருச்சி மாநாட்டிலும் உணர்ச்சிமிகு எழுச்சி உரை ஆற்றி தொண்டர்களுக்கு ஆறுதல் படுத்தினார்/ 1980 ஆம் ஆண்டு கழகம் வெற்றி வாய்ப்பு இழந்திருந்த நேரத்தில், சோகமயமாக உலவிய தொண்டர்கள் மத்தியில் கலைஞரின் வரிகள் மிக முக்கிய அடையாளமாக மாற்றியது. தேர்தல் தோல்வியால் வாடிப் போயிருந்த தொண்டர்கள் அதைக்கேட்டு மூவேந்தரின் படைகளைப் போல எழுச்சியுற்றனர்.

கழகம் தோல்வி கண்டு இருந்தாலும், மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளைச் செய்யத் தவறாது. மக்களை விட்டுக் கழகம் என்றும் அகலாது” என்பதை இலக்கியமாக அக் கூட்டத்தில் மேலும் சுட்டிக் காட்டிப் பேசினார். தேர்தல் தோல்வியால் தொண்டர்கள் மனம் தளர்ந்து விடக்கூடாது என்பதற்காகத் தமக்கும், மக்களுக்குமான பிணைப்பை விளக்க கலைஞர் அவர்கள் கையாண்ட மற்றொரு நிகழ்ச்சியானது உவமைச் சான்றாகப் பேசுகிறது. “தேர்தலில் மக்கள் என்னைத் தோற்கடித்து போ” என்று சொன்னாலும், தான் அரசியல் விட மாட்டேன் அல்லது தமிழ் மக்களை விட்டு ஓடி விட மாட்டேன் என்று நினைவுப்படுத்தினார். “தான் ஒன்றும் கல்லை எறிந்தால் ஓடிப் போகும் தெரு நாய் அல்ல; எஜமானன் கோபித்து அடித்தாலும், வீட்டை விட்டு போகாமல் மீண்டும் அவரிடமே வந்து வாலையாட்டிப் பாசம் காட்டும் வீட்டு வளர்ப்பு நாய் போன்றவன் நான்! போ என்று சொல்வதற்கு நான் ஒன்றும் தெருவோரத்து நாய் அல்ல; வீட்டின் வளர்ப்பு நாய்!” என்று முழக்கமிட்டார்.

அரசியல் வரலாற்றில் வெற்றி வாய்ப்பை இழந்த நேரத்தில்; இந்தத் தமிழ் மக்களுக்கு ஆற்றிய உரை மிக முக்கியமாகக் கருதப்படுகிறது. தொடர் தோல்விகளால் துவண்டு போயிருந்த தி.மு.க. தொண்டர்களை மீண்டும் எழுச்சி பெறச் செய்யவும் மக்கள் மத்தியில் திமுக மீதான ஈடுபாட்டையும், கொள்கைப் பிணைப்பையும் மீண்டும் உருவாக்கவும் இந்த உணர்ச்சி மிகு அடுக்கு மொழி உவமைகள் ஆழமாக மக்கள் நெஞ்சில் தைத்ததுடன், கலைஞர் மீதும் கழகம் மீதும் தொடர் பற்றுக் கொண்டு செயலாற்ற பெரும் உதவிகரமாக அமைந்தன!

கலைஞரின் அதே நிலைப்பாடு கொள்கையோடு இன்றைய அரசியல் சூழ்நிலையில் கழகத் தலைவர் தளபதி அவர்கள் கழகத்தின் மீது அக்கறை செலுத்தி நடவடிக்கை எடுக்கும் முயற்சியில் முழுமூச்சோடு ஈடுபட்டு வருகிறார்.

கட்சியா? ஆட்சியா? என்றால் கட்சிதான் முக்கியம் என்று கலைஞர் பல்வேறு தருணங்களில் சொற்பொழிவுகள், எழுத்து ஓவியங்கள், செயல்பாடுகள் போன்றவற்றால் நிரூபித்துக் காட்டியவர். ரத்தமும் எலும்பும் சதையும் நாளமும் கொண்டு இருப்பவர்கள் கழகத் தொண்டர்கள், அவனால் தான் இந்த இயக்கம் இயங்குகிறது.

2011 ஆம் ஆண்டு தன் சொந்த ஊரான திருவாரூர் தொகுதியில் பனிரெண்டாவது முறையாகப் போட்டியிட்டுத் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராகக் கலைஞர் தேர்வு செய்யப்பட்டார். 50,000 வாக்குகள் மேல் பெற்று வெற்றி பெற்றிருந்தார். வாக்காளர்களுக்கு நன்றி அறிவிக்கும் கூட்டமாகத் திருவாரூர் வ. சோ. ஆண்கள் மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் (05.06.2011) கலந்து கொண்டார் கலைஞர். “என் தம்பிமார்களை எல்லாம் தோற்கடித்து விட்டார்கள் என்பதை நினைக்கும் போது... திருவாரூரில் நான் பெற்ற வெற்றி எனக்கு வெற்றியாகத் தெரியவில்லை... இருந்தாலும், அந்தத் தோல்வி களை ஒரு படிக்கட்டாக வைத்துக் கொண்டால் தான் வெற்றி கிடைத்திட முடியும் என்ற பொன்மொழிக்கு ஏற்ப, என்றைக்கும் தோல்விகளைப் பற்றிக் கவலைப்படாமல், துவண்டு விடாமல் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன்!....” என்று தொண்டர்களுக்குக் கழகம் பற்றி வரலாறு கூறி உணர்ச்சி உரையாற்றினார். இன்று அதே நடைமுறையில் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் தேர்தல் தோல்வியிலும் துவண்டு விடாமல் தொண்டர், தோழர்கள் இடத்தில் ஊக்கம் காட்டி வருகிறார்.



**கவிஞர் தமிழ்தாசன்**
**கழக தீர்மானக் குழுத் தலைவர்**

“என்ன ஆனாலும் சரி; சூரியன் ஒருபோதும் மறையாது! திரும்ப உதித்தே தீரும்! சூரியன் இல்லாமல் எதுவும் நடக்காது! இது இயற்கை நியதி மட்டுமல்ல; தமிழ்நாடு அரசியல் நியதியும் இதுதான். நமக்குப் பெரும்பான்மை கிடைக்க வில்லையே தவிர, கணிசமான எண்ணிக்கையில் வாக்குகள் கிடைத்திருக்கின்றன. இப்படி ஆட்சியில் இருந்து தோற்ற போதெல்லாம் நாம், மிகக் குறைந்த இடங்களில் வென்றிருக்கிறோம்; இப்பொழுதும் 59 இடங்களில் வந்திருக்கின்றோம். பொது வாழ்க்கைக்கு வந்தால் வெற்றி, தோல்வி இயல்பு. ஏற்ற இறக்கங்கள் இருக்கும். மேடு பள்ளங்கள் இருக்கும். அதுதான் அரசியல்! இந்தப் பக்குவம் வேறு யாரையும் விட நமக்குத் தான் அதிகம். இதுதான் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் நமக்குக் கற்றுத் தந்திருக்கிற பக்குவம்!” என்று அண்ணா அறிவாலயத்தில் (14.05.2026) அன்று நடைபெற்ற தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் தளபதி ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் படுத்தி உரையாற்றி இருக்கிறார்கள்.

**“என் சக்திக்கு மீறியும் உழைத்தேன்; உங்களையும் ஓய்வில்லாமல் உழைக்க வைத்தேன்; இதுவரை எந்த அரசும் செய்யாத சாதனைகளை நாம் கொடுத்தோம்; மக்களுக்கு நேரடிப் பயன் கிடைத்தது என்பது அவர்களுக்கும் தெரியும். இருந்தாலும், நாம் ஆட்சி அமைக்க இயலவில்லை.... இதற்காக நான் யாரையும் சுட்டிக் காட்டிக் குறை சொல்ல விரும்பவில்லை. தோல்விக்கான காரணங்களைக் கழக நிர்வாகிகள் தொடங்கிப் பொதுமக்கள் வரை எல்லா விதமாகவும் பேசுகிறார்கள். இதற்கு யார் தான் பொறுப்பு? யாரும், யாரையும் குறை சொல்லாதீர்கள்!..... கழகத்தின் தலைவர் என்ற முறையில் நானே இந்தத் தோல்விக்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்; இதுதான் நிதர்சனம். வெற்றி கிடைத்தால் அது ஒரு பெருமை அடையும் தான். தோல்விக்கான பொறுப்பையும் ஏத்துக்கிறதிலே எந்தத் தப்பும் இல்லை. அதுதான் நியாயம்!**

**நீங்களும் இந்தத் தோல்விக்காக அடுத்தவர் மேல் பழி போடாதீர்கள்; தோல்வியின் போது ஆதங்கம் கொட்டுவது இயல்பானது. ஆனால், அது பழியாக இருக்கக் கூடாது. ஆய்வு செய்வதானால், அடுத்தவர் மீதான அவதூறாக இருக்கக் கூடாது. தமிழ்நாட்டு மக்களை இனி இங்கு இருந்து எப்படி மீட்டெடுக்கப் போகிறோம்? அதைப் பற்றி எண்ணுங்கள்! எங்கே கோளாறு நடந்தது? எங்கு மெத்தனம் ஏற்படுத்தியது? என்பது தான் முக்கியம். நாமே ஒவ்வொருவரும் நம்மை நாமே சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்!” என்று அக்கூட்டத்தில் தலைவர் மு.க.ஸ்டாலின் பேசியது இயேசுபிரான் மலை பிரசங்கத்தில் தன் சீடர்களுக்கு உரையாற்றிய செய்திகள் போல் நினைவுப் படுத்தியுள்ளது.**

**இயக்கத் தோழர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவர் மீதும் ஏதேனும் ஒரு காரணத்திற்காகக் குற்றச்சாட்டு கள் சொல்லலாம். அந்தக் குற்றச்சாட்டுகளைக் கூறிப் பழி போடலாம். அப்படிப்பட்ட பழிகள், குறைகள் கூற வேண்டாம். எல்லாவற்றையும் நானே ஏற்றுக்கொள்கிறேன்.** வெற்றியை எப்படி நான் ஏற்றுக் கொள்கிறேனோ, அதைப் போல தோல்விக்கும்நானே பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன்....” என்று தளபதி அவர்கள் பெருந்தன்மையோடு, தன் தலைமைப் பண்பைக் காட்டி உடன்பிறப்புகளான மாவட்டச் செயலாளர்கள் மத்தியில் பேசியிருப்பது மிகவும் நெஞ்சை நெகிழ வைக்கிறது.

“மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு” என்றார் அண்ணா. துப்பாக்கி வேட்டையை விட ஓட்டுச் சீட்டுத் தான் வலிமையானது” என்று முழங்கிய ஆபிரகாம் லிங்கனது அதே பொருள் புரிந்த கருத்தைத் தமிழகத்தில் பரப்பி வந்தவர் அண்ணா. “ஓட்டா (Vote)? வேட்டா (bomb)?என்றால், ஓட்டு முறையில் நம்பிக்கை உள்ள இயக்கம் தி.மு.க” என்றார். அதைத் திருப்பி பேலட்டா? (ballot)?, புல்லட்டா (bullet)? என்றால், பேலட்டின் மீது நம்பிக்கை கொண்ட இயக்கம் “என்று கூறுவார் அண்ணா! அவரே அடிக்கடி சட்டமன்ற, நாடாளுமன்ற நடவடிக்கைகளிலும், ஏடுகளில் எழுதும் போதும், மேடைகளில் சொல்லாடல்பொழியும் போதும், மக்களாட்சித் தத்துவத்தை அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஆப்ரஹாம் லிங்கன் வரிகளை நினைவுப்படுத்துவார். “மக்களுக்காக, மக்களால் ஆன, மக்களின் ஆட்சி (Government of the people, for the people, by the people) என்பன போன்ற இலட்சிய வரிகள் கோடிட்டுக் கட்டத் தவற மாட்டார்.

தி.மு.க. ஜனநாயக நம்பிக்கையில் ஆழமான கொள்கையுடைய இயக்கம் என்பதைச் சுட்டிக் காட்டுவார். அவரின் தம்பியாகிய கலைஞர் ஜனநாயகம் எனும் மக்களாட்சிப் பாதையைத் தவற விடாமல் சர்வாதிகாரத்தை வீழ்த்துவதற்குத் தமிழ்நாடு மட்டுமல்லாமல்; இந்தியாவிற்கே வழிகாட்டியாக நின்றார். அவர் காவிரிக் கரைக்கு மட்டுமல்லாமல், கங்கைக் கரைக்கும் ஒளி விளக்காகத் திகழ்ந்தார். அவர்கள் ஏற்றி வைத்த ஜனநாயக விளக்கைக் கையில் ஏந்தி தளபதி இன்று கழகத்தை மக்களுக்கான இயக்கமாக மாற்றிக் கொண்டிருக்கிறார்.

தேர்தல் அரசியல் மற்றும் ஜனநாயகத்தின் மீது தனக்குள்ள அசைக்க முடியாத நம்பிக்கையை வெளிப்படுத்த அண்ணா கையாண்ட மிகச் சிறந்த அரசியல் முழக்கம் இது. மக்களாட்சித் தத்துவம் ஆயுதப் புரட்சி அல்லது வன்முறை (Bullet) மூலம் மாற்றங்களை ஏற்படுத்துவதை விட; தேர்தல் மற்றும் வாக்குச்சீட்டு (Ballot) மூலம் அமைதியான முறையில் ஆட்சியை மாற்ற முடியும் என்ற ஜனநாயகக் கொள்கையை அண்ணா நம்பினார். அதைத் தொடர்ந்து கலைஞரும் அந்த அறவழிப்பாதையில் இயக்கத்தை நடத்தி வந்தார். உலகில் புகழ்பெற்ற (ballot or Bullet) வாக்குச் சீட்டா? துப்பாக்கிக் குண்டா? என்ற அரசியல் தத்துவக் கருத்தைத் தமிழ் மொழியின் நயத்திற்கு ஏற்ப “ஓட்டா? வேட்டா?; பேலட்டா? அல்லது புல்லட்டா? என்று அடுக்குமொழியில் அண்ணா மொழி பெயர்த்து மேடைகளில் முழங்கி வந்தார். குறிப்பாக தி.மு.க. தேர்தலில் போட்டியிட முடிவு செய்த காலக் கட்டத்தில், தங்களின் அரசியல் பாதை வன்முறையற்ற அறவழியிலான தேர்தல் நெறிப்பாதை என்பதைக் தொண்டர்களுக்கும், தோழர்களுக்கும், மக்களுக்கும் தெளிவுபடுத்த அண்ணா இந்த வரிகளைப் பயன்படுத்தினார்.

அரசியல் எதிரிகளால் எத்தனையோ ஈட்டிகள், கட்டாரிகள், கொடுவாள்கள், கோடரிகள் தாக்குதல்களைத் தாங்கி வளர்ந்த இயக்கம் தான் நமது தி.மு.கழகம். எந்த ஒரு தாயும் தனது குழந்தை சிறுநீர் பெய்து, தான் அணிந்திருந்த உடைகளை நனைத்து விட்டது என்பதற்காக, குழந்தையைத் தூக்கி எறிந்து வெறுத்து விட மாட்டாள். அதைப்போல, “இந்தத் தேர்தலில் மக்கள் வாக்களிக்கத் தவறிவிட்டார்கள் என்பதற்காக; அவர்களைப் புறக்கணித்து விட முடியாது. நமது விளக்கமும், பயணமும் மேலும் தொடர வேண்டும்” என்பார் அண்ணா. “மழையிலும், வெயிலிலும் காய்ந்து வேளாண்மை செய்யும் உழவன், பருவத்தில் மழை பெய்யவில்லை என்றால், விளைச்சல் பொய்த்து விட்டால், அல்லது பெருமழை பெய்து வெள்ளச் சேதம் ஏற்பட்டு விட்டால், அத்துடன் தான் விவசாயம் செய்வதை நிறுத்தி விட மாட்டான். அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வான். அதைப்போலத் தான் இந்தக் கழகம் அடுத்தக் கட்ட நடவடிக்கைகளில் இறங்கி உள்ளது.” என்றார் கலைஞர்.

இன்று அண்ணா, கலைஞர் ஆகியோரின் அதே நடைமுறையில் கழகத் தலைவர் தளபதி, நடந்து முடிந்த தேர்தல் தோல்விகளின் நோய் கண்டறிந்து, மருந்து இடுவதற்கான ஆக்கப் பூர்வமான, அறிவுப்பூர்வமான நடைமுறையை தொண்டர்கள், தோழர்களிடத்தில் நேரில் கண்டு கையாளும் விதிகளை வகுத்துள்ளார்.

“சரியான நேரத்தில், சரியான முடிவு எடுத்து, சரியாய்ச் செயல்படுத்தும் மனிதனுக்குப் பெருமை தவிர வேறு இல்லை” என்ற அறிஞர் “கானிங்” கின் மணிமொழியைப் போல, தலைவர் தளபதி அவர்கள் 36 பேர் கொண்ட குழுவை ஆய்வு செய்ய மாநிலம் முழுவதும் அனுப்பி அறிக்கை கேட்டு உள்ளார்.

சென்னையில் கூடிய தி.மு.கழகத்தின் புதிய பொதுக் குழு (04.07.1955) தேர்ந்தெடுத்த புதிய பொதுச் செயலாளரான நாவலர் நெடுஞ்செழியன் அவர்களை திருச்சி மாநாட்டிற்கு அழைத்தார் அண்ணா. திருச்சி மாநாட்டில் (1956 ஆம் ஆண்டு மே திங்கள் 17, 18,19, 20) கலந்து கொண்ட போது, “தம்பீ வா!.... தலைமை தாங்கவா!.... உன் ஆணைக்கு நாங்கள் எல்லோரும் அடங்கி நடப்போம்!.. தலைமை ஏற்று நடத்த வா!...” என்று அண்ணா பேசிவிட்டு கீழே இறங்கி அமர்ந்து, கழகத் தோழர்களின், அனைவருடைய பேச்சையும் பொதுமக்களோடு கேட்டுக் கொண்டிருந்ததைப் போல, இப்பொழுது தலைவர் தளபதி அவர்கள் மக்கள் தொண்டாற்ற இயக்கத் தோழர்கள் தரும் எதிர்கால வேண்டுகோள் கருத்துக்களைக் கேட்பதற்காக “உடன்பிறப்பே வா!... நீங்கள் சொல்லுங்கள்!..நான் கேட்கிறேன்!... அடுத்த 100 ஆண்டுகளுக்கு இந்த இயக்கம் உயிர்ப்போடு இயங்கும். உங்களுக்காக இயங்கும். உடன்பிறப்பே!.. நீங்கள் சொல்லுங்கள்!... நான் கேட்கிறேன்!.” என்று தளபதி மு.க. ஸ்டாலின் காணொளியில் பேசியிருக்கிறார்.

அது மட்டும் அல்ல; ஆங்காங்கு நடந்த, நடக்கக்கூடிய குறைகளை; நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் தவறுகளை – குறைகளை கேட்பதற்காக 36 பேர் கொண்ட குழுவை அனுப்பி வைத்து அறிக்கை கேட்டு இருக்கிறார். ஆகவே, உடன்பிறப்பே! உயிர் அணுவே! அண்ணாவின் தம்பிமார்களே, கலைஞரின் உடன்பிறப்பே! நாம் அனைவரும் ஒன்று கூடுவோம்! மக்கள் பணியை, மலர்வண்டுப் பணியாக நாடுவோம்! தளபதி தலைமையில் கழகத்தைக் காப்போம்!